# நீதிமன்றக்காவலில் செஞ்சி சிறையில்
# ரீட்டாமேரி கற்பழிப்பு



## தமிழக வரலாறும், காவல் துறையும் :

காவல் நிலையங்களில் பெண்கள் கற்பழிக்கப்படுகிறார்கள் என்ற செய்தியை பத்திரிகைகளில் படித்திருக்கிறோம். குறிப்பாக சிதம்பரம் அண்ணாமலை நகர் காவல் நிலையத்தில் பத்மினியும், தளி காவல் நிலையத்தில் கல்பனாவும், சுமதியும், புதுச்சேரி காவல் நிலையத்தில் அத்தியூர் விஜயாவும்,முத்தாண்டிகுப்பம் காவல் நிலையத்தில் வசந்தாவும், கற்பழிக்கப்பட்டார்கள் என்ற செய்தியை கேள்விப்பட்டிருக்கிறோம். முதன்முதலாக தமிழக வரலாற்றில் நீதிமன்றக் காவலில் ரீட்டாமேரி என்ற 19 வயது நிறைந்த பெண் கற்பழிக்கப்பட்டிருக்கிறார் என்ற செய்தி தமிழகத்தையே நிலைகுலைய வைத்திருக்கிறது.

## ரீட்டாமேரியும், அவரது குடும்பமும் :

சென்னை திருவெற்றியூர் ஏழத்துக்காரன் தெருவைச் சேர்ந்த லீலாவதி–சௌந்தரராஜன் தம்பதியரின் கடைசி மகள்தான் ரீட்டாமேரி, வயது 19. இவருக்கு 4 சகோதரிகளும், 2 சகோதர்களும் உள்ளனர். தனது சிறுவயதிலேயே தந்தையை இழந்த ரீட்டாமேரி தனது சகோதரர் சாமுவேல் குடும்பத்தாருடன் தனது தாயாரோடு வசித்து வந்தார். ஈரோட்டில் இருக்கும் தனது மூத்த சகோதரி கீதா அவர்களை சந்திப்பதற்காக ஈரோட்டிற்கு தனது தாயார் லீலாவதியோடு சென்றிருக்கிறார். அங்கே தனசு சகோதரி கீதா மிகவும் வறுமையான சூழலில் தனது குடும்பத்தை நடத்துவதைக் கண்டு மனமுடைந்து மீண்டும் சென்னைக்கு திரும்பலாம் என்று தன் தாயாரோடு பேசி திட்டமிட்டிருக்கிறார். சென்னைக்கு புறப்படுவதற்கு முன்னால் தன் சகோதரி கீதாவோடு சிறு வாய்த்தகராறு ஏற்பட்டது. எனவே தனது சகோதரியுடன் கோபித்துக்கொண்டு தன் காலிலிருந்த வெள்ளிகொலுசை விற்று சென்னைக்கு செல்லலாம் என்று தன் தாயிடம் கூறிவிட்டு ஈரோட்டிலுள்ள கடைவீதிக்குச் சென்றிருக்கிறார். அங்கே ரீட்டாவை நோட்டமிட்ட புரோக்கர் ஒருவன் ரீட்டாவோடு மெல்ல பேச்சுக் கொடுத்து வேலை வாங்கித் தருவதாக கூறி ரீட்டாவை கடத்திச் சென்று கவிதா, ஈஸ்வரி என்ற விபச்சார விடுதி நடத்துனரிடம் சேலம் ஆத்தூரிலுள்ள விபச்சார விடுதியில் ரீட்டாவை விற்பனை செய்திருக்கிறான்.

அங்கே தன் விருப்பமில்லாமல் ரீட்டா மேரி வலுக்கட்டாயமாக விபச்சாரத்தில் ஈடுபடுத்த முயன்றிருக்கிறார்கள். ஆனால் ரீட்டாமேரி எவ்வகையிலும் விபச்சாரத்தில் ஈடுபட மறுத்துவிட்டார். பின்னர் ஆத்தூர் காவல் நிலையத்தில் போலீஸ் புரோக்கராக இருந்து செயல்படும் முருகேசன் என்பவர் ரீட்டாவிடம் நெருங்கிப்பேசி ரீட்டாவை திருமணம் செய்து கொள்வது போல் நடித்து போதை ஊசிகளைப் போட்டு ரீட்டாவோடு பழகியிருக்கிறார். பின்னர் ரீட்டாமேரி விபச்சாரத்திற்கு வருகின்றவர்களுக்கு ஒத்துப்போகாததால் ரீட்டாமேரி மதுரைக்கு கடத்தப்பட்டு அங்கே உள்ள விபச்சார விடுதியில் விற்பதற்கு முயற்சி நடைபெற்றது. அந்த முயற்சி பலன் அளிக்காததால் நேரே திண்டிவனம் கடத்தி வரப்பட்டு திண்டிவனத்தில் ஓ.பி.ஆர். பூங்கா அருகில் ஜோகியர் குடிசை அருகில் விபச்சாரத் தொழில் நடத்தி வரும் சாந்தி என்பவரிடம் ரூ. 7500–00 க்கு விற்கப்பட்டுள்ளார்.

## திண்டிவனமும், விபச்சாரமும் :

தமிழகத்தின் முதல் முதலமைச்சர் என்ற பெயர் பெற்ற ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களின் நினைவாக திண்டிவனம் நேரு வீதியில் உள்ள நெடுஞ்சாலைத்துறை அலுவலகத்துக்கு பக்கத்தில் பூங்கா ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அப்பூங்காவிற்கு ஓ.பி.ஆர். பூங்கா என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்பூங்காவிற்கு பின்புறம் கிடங்கல் ஏரி பகுதி உள்ளது. இங்கே சுமார் கடந்த 40 ஆண்டுகளாக விபச்சாரத் தொழில் தொடர்ந்து ஒரு தொழிற்சாலை இயங்குவது போல பல்வேறு மாநிலங்களிலிருந்து கடத்தி வரப்பட்ட பெண்களை வைத்து விபச்சாரத் தொழில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இத்தொழிலை முழுவதுமாக அழிக்க வேண்டும் என்ற முயற்சியில் மாவட்ட ஆட்சியர்களும், துணை மாவட்ட ஆட்சியர்களும், போலீஸ் அதிகாரிகளும், அரசியல் வாதிகளும் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டும் எவ்வித பலனும் கிட்டவில்லை. அப் பூங்கா பகுதியில் சுமார் 10க்கும் மேற்பட்ட வீடுகள் ஏரியின் ஓரத்தில் கட்டப்பட்டும், சுமார் 15க்கும் மேற்பட்ட தற்காலிக குடிசைகள் போடப்பட்டும் அக்குடிசைகளில் நிரந்தரமாக விபச்சாரத்தொழில் நடைபெற்று வந்தது.

## திண்டிவனம் வந்த சென்னை இளைஞர்கள்:

சென்னை, நங்கநல்லூர் பகுதியைச் சேர்ந்த பா. லட்சுமணன் தன் நண்பர்களுடன் திருவண்ணாமலையில் நடைபெறும் ஒரு திருமணத்திற்குச் செல்வதற்காக 28–10–2001 அன்று இரவு திண்டிவனம் வந்துள்ளார். ஹீரா லாட்ஜில் தங்கிய இளைஞர்கள் 29–10–2001 காலை ஓ.பி.ஆர். பூங்கா அருகே உள்ள கே. ஜே. மதுபானக்கடைக்குச் சென்றுள்ளனர். அதன் அருகே உள்ள ஜோகியர் குடிசைப்பகுதிக்கு லட்சுமணன், சாதிக் பாட்சா ஆகிய இருவர் மட்டும் சென்றனர். அங்கிருந்த சாந்தியிடம் ரூ. 100–00 கொடுத்துவிட்டு முதலில் சாதிக் பாட்சாவும் பின்பு லட்சுமணனும் குடிலுக்குள் இருந்த ரீட்டாமேரியை சந்தித்துள்ளனர். குடிலுக்குள் அழுது கொண்டிருந்த ரீட்டாமேரி தன்னுடன் யாரையும் உடல் உறவு கொள்ள அனுமதிக்காமல்

தன் சோகக் கதையை அந்த இளைஞர்களிடம் கூறியுள்ளார். பின்பு லட்சுமணன் மதுபானக்கடையில் இருந்த நண்பர்களுடன் கலந்து பேசி ரீட்டாமேரியை காப்பாற்ற முயற்சிக்கிறார். ஆனால் அவருடைய நண்பர்கள் இது ரொம்பவும் ஆபத்தான வேலை என்று கூறி லாட்ஜை நோக்கி சென்றுவிட்டனர். லட்சுமணன் மனம் தளராமல் மீண்டும் சாந்தியிடம் ரூ. 100–00 கொடுத்துவிட்டு ரீட்டாமேரியை சந்தித்து காப்பாற்றுவதாக உறுதி அளித்துள்ளார்.

## காவல் துறையும், ரெய்டும் :

இந்த நிலையில்தான் அப்பகுதிக்கு போலீஸ் ரெய்டு வந்துள்ளது. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு லட்சுமணன் ரீட்டாமேரியை ஒரு ஆட்டோவில் அழைத்துக்கொண்டு திண்டிவனம் வீராணம் எதிரிலுள்ள திண்டிவனம்–சென்னை நெடுஞ்சாலையில் சென்னை செல்லும் பேருந்தில் ஏறி தப்பிக்க முயன்றபோது சாந்தியும், புரோக்கர்களும் ஆட்டோக்களில் வந்து மடக்கினர். இந்த சமயத்தில் திண்டிவனம் வழக்கறிஞர் ச. லூர்துசேவியர் அவர்கள் அவ்வழியாக காரில் சென்றபோது ஆட்டோவில் வேகமாக வந்து அவசர அவசரமாக சென்னை பேருந்தில் ஏறிய நபர்களையும், பேருந்து நிறுத்தப்பட்டு பேருந்தில் ஏறியவர்களை கீழே இறங்கவும் முற்பட்டதை பார்த்திருக்கிறார். கீழே இறக்கப்பட்ட லட்சுமணனும், ரீட்டாமேரியும் சாந்தி மற்றும் விபச்சார புரோக்கர்களால் மடக்கப்பட்டு தாக்கப்பட்டனர்.

## திண்டிவனம் காவல் துறையில் சிக்கிய ரீட்டா மேரி:

ஹீரா லாட்ஜில் தங்கியிருந்த லட்சுமணனின் மற்ற நண்பர்கள் சென்னைக்குச் செல்வதற்காக பஸ் ஸ்டாப்புக்கு வந்தபோது லட்சுமணன் விபச்சார விடுதி நடத்தி வரும் சாந்தி மற்றும் அவரது புரோக்கர்களிடமும் மாட்டிக்கொண்டதை அறிந்து அவர்களே நேரடியாக திண்டிவனம் காவல் நிலையம் சென்று அய்யா சென்னையை சேர்ந்த பெண் ரீட்டா மேரி கடத்தி வரப்பட்டு திண்டிவனத்தில் விபச்சார விடுதி நடத்தி வரும் சாந்தி புரோக்கரிடம் விற்கப்பட்டு விபச்சார விடுதியில் வைக்கப்பட்டிருந்தாள். நான் அவளை மீட்டு சென்னைக்கு அழைத்து செல்கிறேன் எனக்கு உதவி செய்யுங்கள் என்று அப்போது அங்கிருந்த ராஜ்குமார் என்ற உதவி ஆய்வாளரிடம் முறையிட்டிருக்கிடிறார். அதோடு மட்டுமில்லாமல ரீட்டாவை காப்பாற்றுங்கள் என்று உதவி ஆய்வாளரின் காலிலே விழுந்து கெஞ்சி இருக்கிறார். நீ என்ன பெரிய காந்தியா ? நீ பெரிசா காப்பாற்ற வந்துவிட்டாய் என்று அதிகாரத் தொனியில் பேசி சென்னையை சேர்ந்த அந்த 4 இளைஞர்களையும் அடித்து மிரட்டி இருக்கிறார்.

இச்சமயத்தில் சாந்தியும், புரோக்கர்களும் நேரே காவல் நிலையம் சென்று உதவி ஆய்வாளர் ராஜ்குமாரை தனியே அழைத்துப் பேசி கொடுக்க வேண்டியதை கொடுத்து சரிக்கட்டியிருக்கிறார்கள். அதன் பின்னர் உதவி ஆய்வாளர் ராஜ்குமார் அவர்கள் உங்க அக்கா தங்கச்சி யாரேனும் இருந்தா அவளை அழைத்து வந்து விட்டுவிட்டு இவளை அழைச்சிட்டுப் போங்கடா என்று கூறி அவமானப்படுத்தி இருக்கிறார். இந்த இளைஞர்களிடம் இருந்த ரூ. 5100–00, ஒரு கைக்கடிகாரம், ஓட்டுநர் உரிமங்கள் 2, ஆகியவற்றை காவலர்கள் பறித்துக் கொண்டிருக்கிறார்கள். இளைஞர்களிடமிருந்து பறிக்கப்பட்ட பணத்திலே காவலர்கள் எல்லோரும் பிரியாணி வாங்கி சாப்பிட்டிருக்கிறார்கள். ரீட்டாமேரி தனது குடும்பச் சூழ்நிலையையும், விலாசத்தையும், தான் எவ்வாறு கடத்தப்பட்டேன் என்ற விவரத்தையும், சென்னை இளைஞர்கள் ரீட்டாவை காப்பாற்ற எடுத்தமுயற்சியையும், உதவி ஆய்வாளர் ராஜ்குமாரிடம் விவரமாக கூறியிருக்கிறார்.

## போலீசாரின் சந்தேகம் – சாராய வழக்கு :

மேற்கண்ட சென்னை இளைஞர்கள் நால்வர் மீதும், 29–10–2001 அன்று காலை 2 மணிக்கு கைது செய்ததாக 41சிஆர். பி.சி. கேசில் குற்ற எண் 1107, 1108, 1109, 1110/2001ல் வழக்கு பதிவு செய்யப்பட்டு முதல் தகவல் அறிக்கை தயார் செய்யப்பட்டு காவல் நிலைய எப்.ஐ.ஆர். இண்டக்சில் பதிவு செய்யப்பட்டு முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பப்படாமலேயே காவல் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டது. மேலும், அந்த 4 இளைஞர்கள் திண்டிவனம் நகரில் வெவ்வேறு இடங்களில் சாராயம் விற்றதாக மீண்டும் ஒரு பொய் வழக்கு போடப்பட்டது. குற்ற எண் 1111, 1112, 1113, 1114/2001 ஆகும். இந்த சாராய வழக்கில் 4 இளைஞர்களும் திண்டிவனம் குற்றவியல் நீதிமன்றம் எண் 1ல் ஆஜர்படுத்தப்பட்டு திண்டிவனம் கிளைச் சிறையில் அடைக்கப்பட்டனர்.

## விபச்சார வழக்கு :

ரீட்டாமேரி மீதும், ஈச்சேரி கிராமத்தைச் சேர்ந்த வேலு என்பவரை ரீட்டாமேரி கண் சிமிட்டி விபச்சாரத்திற்கு அழைத்ததாக குற்ற எண் 1115/2001ல் வழக்கு பதிவு செய்யப்பட்டு திண்டிவனம் குற்றவியல் நீதிமன்றம் எண் 1ல் ஆஜர்படுத்தப்பட்டு செஞ்சி கிளைச் சிறையில் அடைக்கப்பட்டனர்.

## வழக்கறிஞரும், ரீட்டாமேரியும் :

29–10–2001 அன்று மாலை திண்டிவனம் நீதித்துறை நடுவர் மன்றத்தில் ரீட்டாமேரி ஆஜர்படுத்தப்பட்டபோது வழக்கறிஞர் லூர்து சேவியர் அவர்கள் சென்னை நெடுஞ்சாலையில் ஆட்டோவிலிருந்து இறங்கி சென்னை செல்லும் பேருந்தில் ஏறியபோது பார்த்த அந்தப் பெண்தான் இவர் என்பதை அறிந்து அவருடன் பேசி அவரிடம் இருந்து தகவல்களைப் பெற்றிருக்கிறார். அப்பொழுது ரீட்டா நல்ல மனநிலையில் இருந்தார். பின்னர் 31–10–2001 அன்று திண்டிவனம் காவலர் துரைராஜ் அவர்கள் முயற்சி செய்து குற்றத்தை ஒப்புக் கொள்கிறார் என்ற பெயரில் திண்டிவனம் நீதித்துறை நடுவர் எண்1ல் செஞ்சி சிறையிலிருந்த ரீட்டாமேரியை அழைத்து வந்து ஆஜர்படுத்தினார்.அப்பொழுது ரீட்டாமேரி எழுந்திருக்க முடியவில்லை. அவரால் நடக்கவும் முடியவில்லை. அப்பொழுது துரைராஜ் மற்றும் மோகனசுந்தரி (பெண் காவலர்) ஆகியோர் ரீட்டாவை கைத்தாங்கலாக தூக்கி வந்து நீதிமன்ற வளாகத்திலிருந்த பெஞ்சிலே கிடத்தினர். அப்போது ரீட்டாமேரிக்கு

தொடர்ந்து உதிரப்போக்கும், வயிற்றில் கையை வைத்தபடி வலி தாங்க முடியாத நிலையிலும், சித்தப்பிரமை பிடித்த நிலையிலும் இருந்தார். இதைக்கண்டு அதிர்ச்சியுற்ற வழக்கறிஞர் போலீசாரின் கெடுபிடிகளுக்கு மத்தியில் யாருடைய அனுமதியும் இல்லாமல் ரீட்டாவோடு போலீசார் இல்லாத நேரம் பார்த்து பேசியபோது செஞ்சி சிறையில் வார்டன் ஜெயபால் தலைமையில் 7 பேர் கொண்ட குழு தன்னை கெடுத்துவிட்டதாக கூறி தனக்கு காலில் ஏற்பட்டிருந்த காயங்களைக்காட்டி அழுதிருக்கிறார்.

## வழக்கறிஞரின் புகார் :

ரீட்டாமேரி செஞ்சி சிறையில் வார்டன் ஜெயபால் தலைமையில் 7 பேர் கொண்ட குழு ரீட்டா மேரியை கற்பழித்திருக்கிறார்கள் என்பதை ரீட்டாமேரி மூலம் அறிந்த வழக்கறிஞர் லூர்து சேவியர் அவர்கள் ஒரு புகார் மனுவை தயார் செய்து முதலமைச்சர், ஆளுநர், குடியரசுத்தலைவர், மாவட்ட ஆட்சியர், சிறைத்துறை தலைவர், தேசிய மனித உரிமை ஆணையம், மாவட்ட கண்காணிப்பாளர் ஆகியோருக்கு தொலைபேசி மூலமும், பேக்ஸ் மூலமும் புகார் 31–10–2001 அன்று பிற்பகல் சுமார் 1 மணியளவில் அனுப்பப்பட்டது.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட ரீட்டாமேரியின் நிலையை அறிந்த குற்றவியல் நீதிமன்ற நடுவர் எண் 1 அவர்கள் மருத்துவப் பரிசோதனைக்காக ரீட்டாமேரியை விழுப்புரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். அங்கே ரீட்டாமேரிக்கு மருத்துவம் பார்ப்பதற்கு பதிலாக பாதுகாவலுக்காக சென்ற காவலர் மோகனசுந்தரி அவர்களுக்கு குளுக்கோஸ் ஏற்றப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

1–11–2001 அன்று மதுரையிலுள்ள மனித உரிமை நிறுவனமான மக்கள் கண்காணிப்பகம், தமிழ்நாடு நிறுவனத்தின் இயக்குனர் ஹென்றி திபேன் அவர்களை தொடர்பு கொண்டு ரீட்டாமேரி கற்பழிக்கப்பட்ட செய்தியை தெரிவித்த பின் அவர் அவரது நிறுவனத்திலிருந்து ஆர்.வி. லெனின் என்பவரை திண்டிவனத்திற்கு எனக்கு உதவும் பொருட்டு உடனே அனுப்பி வைத்தார். ஆர்.வி. லெனின் அவர்கள் 1–11–2001 அன்று சுமார் 10 மணியளவில் வழக்கறிஞர் லூர்து சேவியரை சந்தித்தார். அதன் பின்னர் விழுப்புரம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் ரீட்டாமேரியை சந்திக்க விழுப்புரம் சென்றார். அதன் பின்னர் 1–11–2001 அன்று ஏற்கனவே சிறையில் அடைக்கப்பட்ட 4 இளைஞர்களும், தங்களின் மீது போடப்பட்ட பொய் வழக்கை ஒப்புக் கொண்டு அபராதத் தொகையை கட்டி சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டனர்.

1–11–2001 அன்று விழுப்புரம் அரசு மருத்துவமனையில் பரிசோதனை முடிந்து வந்த ரீட்டாமேரி திண்டிவனம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். நீதிமன்ற நடுவர் உத்திரவின் பேரில் சென்னை மயிலாப்பூரிலுள்ள அரசு மகளிர் காப்பகத்தில் அடைக்கப்பட்டார். 1–11–2001 அன்று சிறையில் இருந்து விடுதலையான 4 சென்னை இளைஞர்களுக்கும் புரோக்கர்களாலும், சாந்தியாலும் ஆபத்து ஏற்படும் என்று கருதி மக்கள் கண்காணிப்பகம் ஆர்.வி.லெனின் மூலமாக விழுப்புரத்திற்கு அழைத்துச் சென்று தங்க வைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அங்கே இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தோழர்களும், இந்திய ஜனநாயக மாதர் சங்கத்தாரும் இணைந்து 4 இளைஞர்களுக்கும் தக்க பாதுகாப்பு அளித்தனர். அந்த இளைஞர்கள் மூலமாக திண்டிவனம் காவல் நிலையத்தில் நடந்த சித்ரவதைகளையும், ரீட்டாமேரிக்கு ஏற்பட்ட கொடுமைகளையும் முழுமையாக் தெரிந்து கொண்டனர். அதன் பின்னர் 2–11–2001 அன்று லெனின் அவர்கள் அந்த 4 சென்னை இளைஞர்களுடன் சென்னைக்குச் சென்று ரீட்டாமேரியின் விலாசத்தை வைத்து அவரது தாயாரையும், சகோதரர்களையும் சந்தித்து அவர்களை அழைத்து வந்து மயிலாப்பூரிலுள்ள மகளிர் காப்பகத்திர் இருந்த ரீட்டாமேரியை சந்திக்க ஏற்பாடு செய்தார்.

## ரீட்டாமேரி பிணையத்தில் விடுவிக்கப்படுதல் :

ரீட்டாமேரியின் தாயார் லீலாவதி வழக்கறிஞர் சேவியர் அவர்களைத் தொடர்பு கொண்டு தன் மகளை ஜாமீனில் எடுத்துக் கொடுக்க கேட்டுக்கொண்டதின்படி ரீட்டாமேரி 5–11–2001 அன்று ஜாமீனில் திண்டிவனம் குற்றவியல் நீதித்துறை எண் நடுவர் 1ல் மனு தாக்கல் செய்யப்பட்டு ஜாமீன் உத்திரவு பெற்று சென்னை மயிலாப்பூரிலுள்ள ரீட்டாமேரி மகளிர் காப்பகத்திலிருந்து வெளியில் அழைத்து வரப்பட்டு மதுரை மக்கள் கண்காணிப்பகத்திற்கு லீலாவதியும், ரீட்டா மேரியும் சென்று தங்கி ரீட்டாமேரிக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் 7–12–2001 அன்று சென்னை நீதிமன்ற உத்திரவு படி ரீட்டாமேரி மதுரை மக்கள் கண்காணிப்பகத்திலிருந்து சென்னைக்கு அழைத்துவந்தனர். சென்னைக்கு செல்லும்போது வழக்கறிஞர் லூர்துசேவியர் அவர்களும் உடன் சென்று சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் சேர்த்தனர்.

## லீலாவதியும், புகாரும் :

ரீட்டாமேரியின் தாயாரான லீலாவதி சம்பந்தப்பட்டஉயர் அதிகாரிகளுக்கு தன் மகளுக்கு நடந்த அநீதி குறித்தும், கற்பழிப்பு குறித்து புகார் எழுதி அனுப்பி வைத்தார். அப்புகாரின் அடிப்படையில் செஞ்சி காவல் நிலையத்தில் குற்ற எண் 679/2001ல் 363, 376, **R/W 511 I.P.C.** மற்றும் பிரிவு 5 **PIT Act 376 C**ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

## வருவாய் கோட்டாட்சியரும் விசாரணையும் :

31–10–2001 அன்று வழக்கறிஞர் லூர்து சேவியர் அவர்கள் அனுப்பிய புகாரின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் திண்டிவனம் வருவாய் கோட்டாட்சியர் அவர்களை செஞ்சி சிறையில் ரீட்டாமேரி கற்பழிக்கப்பட்டது சம்பந்தமாக விசாரித்து அறிக்கை தாக்கல் செய்யக் கேட்டுக்கொண்டதின் பேரில் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் விசாரணை நடத்தி ரீட்டா மேரி செஞ்சி சிறையில் கற்பழிக்கப்படவில்லை என்ற பொய்யான அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதாக தெரிகிறது.

மீண்டும் ரீட்டாமேரியின் தாயார் லீலாவதி தந்த புகாரின் பேரில் ஏற்கனவே பொய்யான விசாரணை அறிக்கை தாக்கல் செய்த அதே வருவாய் கோட்டாட்சியரை விசாரணை அதிகாரியாக நியமித்து விசாரிக்க உத்திரவிட்டார். வருவாய் கோட்டாட்சியர் ரீட்டா மேரி கற்பழிப்பு சம்பந்தமான விசாரணையை நடத்தக்கூடாது என்று ஆட்சேபனை மனு வழக்கறிஞர் லூர்து சேவியர் மூலம் தாக்கல் செய்யப்பட்டது.

எனவே வழக்கறிஞர் லூர்து சேவியர் மற்றும் மக்கள் கண்காணிப்பகம் லெனின் அவர்களும் இணைந்து சென்னை உயர்நீதிமன்றத்திலே பொது நல வழக்கு 24248/2001 எண் –ல் வழக்கு தாக்கல் செய்து வருவாய் கோட்டாட்சியரின் விசாரணையை நிறுத்த வேண்டும் என்றும், ரீட்டாமேரி கற்பழிப்பு சம்பந்தமாக சி.பி.சி.ஐ.டி. போலிசாரோ அல்லது சி.பி.ஐ. போலிசாரோ விசாரிக்க உத்திரவிட வேண்டுமென்றும், ரீட்டாமேரிக்கும், காப்பாற்ற முறன்ற 4 இளைஞர்களுக்கும் உரிய நஷ்டஈடு வழங்க வேண்டுமென்றும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட சென்னை உயர்நீதிமன்றம் ஐ.ஜி. திலகவதி அவர்களை விசாரணை அதிகாரியாக நியமனம் செய்து முதல் கட்ட விசாரணை அறிக்கையை தாக்கல் செய்யும்படி கேட்டுக்கொண்டது. வருவாய் கோட்டாட்சியரின் விசாரணையையும் நிறுத்தும்படியும் நீதிமன்றம் உத்திரவிட்டது. ஐ.ஜி. திலகவதி அவர்கள் 27–11–2001 அன்று திண்டிவனத்தில் தனது விசாரணையைத் துவக்கியதில் வழக்கறிஞர் லூர்து சேவியர் அவர்களும், மக்கள் கண்காணிப்பகம் லெனின் அவர்களும், சென்னையைச் சேர்ந்த 4 இளைஞர்களும் முக்கிய சாட்சியம் அளித்தனர்.

மேலும், செஞ்சி, சேலம் போன்ற இடங்களில் விசாரணை மேற்கொண்ட திலகவதி அவர்கள் தனது முதல் கட்ட விசாரணை அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததின் பேரில் செஞ்சி சிறை காவலர்கள் 5 பேர் கைது செய்யப்பட்டும், 2 பெண் பாதுகாவலர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டும், 10 சிறைக்காவலர்கள் இடமாற்றம் செய்யப்பட்டும், திண்டிவனம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளரும், 2 காவலர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டும், 6 காவலர்களும், ஆய்வாளரும், இடமாற்றம் செய்யப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும் சேலம் ஈஸ்வரி, கவிதா மற்றும் திண்டிவனம் சாந்தி ஆகியோர் மீது விபச்சார வழக்கு பதிவு செய்யப்பட்டு குண்டர் தடுப்பு சட்டத்தில் காவலில் வைக்கப்பட்டனர்.

இறுதியாக சென்னை உயர்நீதிமன்றம் ரீட்டாமேரிக்கு ரூபாய் 5 லட்சம் நஷ்டஈடு வழங்கவும், சென்னையில் குடியிருப்பதற்கு குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட வீடு ஒன்று ஒதுக்கித் தரும்படியும் உத்திரவிட்டது. மேலும் எதிர் வரும் காலங்களில் பெண் கைதிகள் சிறையில் அடைக்கப்படும்பொழுது மாவட்டந் தோறும் பெண்களாலேயே நிர்வகிக்கப்படுகின்ற சிறைகளில்தான் அடைக்கப்படவேண்டும் என்று உத்திரவிட்டுள்ளது.

இவ்வழக்கின் விசாரணையை சி.பி.சி.ஐ.டி போலிசார் விசாரிக்க நீதிமன்றம் உத்திரவிட்டுள்ளது.

தற்பொழுது சென்னை உயர்நீதிமன்ற உத்திரவின்படி ரூ. 5 லட்சமும், ஒரு வீடும் தரப்பட்டுள்ளது.

## வழக்கும் விசாரணையும், சி.பி.சி.ஐ.டி. போலிசாரும் :

ரீட்டா மேரி கற்பழிப்பு சம்பந்தமான வழக்கு விசாரணையை சி.பி.சி.ஐ.டி. போலிசார் பொறுப்பு ஏற்றவுடன் வழக்கு விசாரணையை முடித்து குற்ற அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து தற்போது நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

## போலிசாரின் வழக்குகள் :

| வழக்கு விபரம் | குற்ற எண் | குற்றம் சாட்டப்பட்டோர் | நாள் | வழக்கு நிலவரம் |
|---|---|---|---|---|
| 1. சந்தேக கேஸ் | 1107முதல் 1110/01 | 4 இளைஞர்கள் | 29–10–01 | கைரேகை பதிவு, சென்னையில் ஆய்வு, குற்றமற்றவர். |
| 2. சாராய வழக்கு | 1111முதல் 1114/01 | 4 இளைஞர்கள் | 29–10–01 | குற்றத்தை ஒப்புக் கொண்டு அபராதம் செலுத்தியபின் விடுதலை |
| 3. விபச்சார வழக்கு | 1115/01 | ரீட்டா மேரி | 29–10–01 | இவ்வழக்கு போலீசாராலே திரும்ப பெறப்பட்டது |

## லீலாவதி புகாரும், வழக்கும் :

| | | | | |
|---|---|---|---|---|
| 1. ரீட்டா மேரி கடத்தலும்– பொய் வழக்கும்– செஞ்சி சிறையில் கற்பழிப்பும் | 679/01 | சிறை வார்டன்கள் மற்றும் போலீசார்கள் | | வழக்கு நடைபெற்று வருகிறது. |

பொதுநல வழக்கு :

| | | |
|---|---|---|
| லூர்துசேவியர்–லெனின்<br>பொ.வ.எ. 24248/01 | சென்னை உயர்நீதி மன்றம் | 1. வழக்கு சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றம்<br>2. R.D.O. விசாரணை நிறுத்தம்<br>3. திலகவதி ஐ.ஜி. விசாரணை அறிக்கை<br>4. ரூ. 5 லட்சம் நஷ்ட ஈடு<br>5. குடிசை மாற்று வாரிய வீடு ஒதுக்கீடு<br>6. பெண்களே நிர்வகிக்கும் தனிச் சிறை ஏற்படுத்த உத்திரவு |

**போராட்டம் – மக்கள் இயக்கங்களும் :**

**போராட்டத்தில் கலந்துகொண்ட இயக்கங்கள் :**

1. டாக்டர் அம்பேத்கர் முற்போக்கு இளைஞர் இயக்கம் **(AMII)**
2. மக்கள் கண்காணிப்பகம்–தமிழ்நாடு, மதுரை **(Peoples' Watch)**
3. தலித் மக்கள் விடுதலைக்கான அமைப்பு **(HRFDL)**
4. நவஜோதி பெண்கள் இயக்கம்
5. நகர கல்வி மேம்பாட்டுக்குழு
6. ஆதிவாசிகள் கூட்டமைப்பு
7. புதிய யுகம் கூட்டமைப்பு **(New Era)**

| நாள் | இடம் | பங்கேற்பு |
|---|---|---|
| 27–11–2001 | திண்டிவனத்தில் பேரணியும், பொதுக்கூட்டமும். | 3000 பேர் |
| 2–12–2001 | செஞ்சியில் பேரணியும், பொதுக்கூட்டமும். | 1000 பேர் |
| 21–1–2002 | செஞ்சியில் சாட்சி ஏகாம்பரம் தாக்கப்பட்டதை கண்டித்து ஊர்வலமும், ஆர்ப்பாட்டமும் | 500 பேர் |

**உங்கள் பகுதிகளில் பெண்கள் யாரேனும் இப்படிப்பட்ட பாதிப்புக்கு உள்ளானால் செய்யவேண்டியது:**

- சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறையான, தெளிவான, உண்மையான சம்பவத்தை குறிப்பிட்டு புகார் கொடுத்தல்.
- புகாரை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பதிவு அஞ்சல் மூலம் அனுப்புதல்.
- நடவடிக்கை இல்லாத பட்சத்தில் உயர்நீதிமன்றத்தில் ஏற்கனவே புகார் அனுப்பிய ஆதாரங்களோடு வழக்கு தாக்கல் செய்தல்.
- பாதிப்புக்குள்ளான தகவல்களை அருகிலுள்ள மனித உரிமை நிறுவனங்களோடு தொடர்பு கொண்டும், பிற மக்கள் இயக்கங்களோடு தொடர்பு கொண்டும், ஜனநாயக ரீதியான போராட்டங்களை பிரச்சினையை அரசின் கவனத்திற்கு கொண்டு வருதல்.
- பத்திரிக்கையாளர்களை தொடர்பு கொண்டு சம்பவ செய்தியை பத்திரிக்கைகளில் வெளிக் கொண்டுவர முயற்சி செய்தல்.



ரீட்டாமேரி சிகிச்சையின்போது



ரீட்டாவை காப்பாற்றிய சென்னை இளைஞர்கள்



வழக்கறிஞரின் புகாரின்
பேரில் விசாரணை நடத்திய
சூப்ரண்டு ராமச்சந்திரன்



மதுரையிலிருந்து ரீட்டாமேரி சிகிச்சைக்காக
சென்னை வந்தபோது



2–11–2001 செஞ்சியில் நடந்த போராட்டம்



செஞ்சியில் ஏகாம்பரம் தாக்கப்பட்டதை
கண்டித்து



செஞ்சி சிறை வார்டன்கள் கைதானபோது



உயர் நீதிமன்ற உத்திரவின் பேரில்
ஐ.ஜி. திலகவதி விசாரணை
அறிக்கை தாக்கல் செய்தல்.

தொகுப்பு :
வழக்கறிஞர்.ச. லூர்து சேவியர்
திண்டிவனம்.